# ஒதுக்கீடு பறிப்புக்கு கண்டனம்

தேனி, டிச. 30-

'தேனி மாவட்டத்தில் அருந்ததியர் இடஒதுக்கீட்டை அபகரித்து வருவதாக,' ஆதித்தமிழர் பேரவை கண்டனம் தெரிவித்துள்ளது

மாவட்ட செயலாளர் பாண்டியன் கூறியதாவது:

தேனி அல்லிநகரத்தில் உள்ள நடுநிலைப்பள்ளி ஒன்றில், நேர்முகத்தேர்வுக்கு சென்ற ஜெயசுதா என்பவரை பணிநியமனம் செய்த பின், வேறு நபரை நியமிக்க, மூன்று மாதத்திற்கு பின் வெள்ளைத்தாளில் கையெழுத்தி வாங்கியுள்ளனர்.

தேனியில் மற்றொரு தொடக்கப்பள்ளியிலும் இதே போல, பிரியா என்பவரிடம் கையெழுத்து பெற்றுள்ளனர். தொடர்ந்து கல்வி நிறுவனங்களில், அருந்ததியர்களுக்கான இடஒதுக்கீட்டை பறித்து வருகின்றனர். சம்மந்தப்பட்ட அதிகாரிகள் மீது, ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டும், எனக்கூறியுள்ளார்.

தினமலர் 30-12-2014

# சட்டசபை தீர்மானத்தை

சாதி ஒழிப்பே

சமூக விடுதலை



# ஆதித்தமிழர் பேரவை

## தேனி மாவட்ட தலைமையகம்

### அல்லிநகரம்.




வீர. பாண்டியன்
மாவட்ட செயலாளர்

தீப்பொன்ராசு
தலைவர்


தேதி : 26/10/2011

பெறுநர் :-

உயர்திரு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள்,
தேனி மாவட்டம்.

அய்யா,

வணக்கம், கடந்த 2008ம் வருடத்தில், தாழ்த்தப்பட்ட வர்களுக்கென அரசால் வழங்கப்பட்ட 18% இடஒதுக்கீட்டில் அருந்ததியர்களுக்கென 3% ~~[illegible]~~ உள் இடஒதுக்கீட்டில் அரசாணை பிறப்பிக்கப்பட்டதன்படி அனைத்து துறைகளில் அரசு அலுவலகங்களில் கல்வி, வேலை வாய்ப்பு போன்ற பல்வேறு சமூக நல பாதுகாப்பு நலன் கருதி அருந்ததியர்களுக்கு வழங்கப்பட்ட மேற்படி 3% இடஒதுக்கீடு தனியார் மற்றும் அரசு உதவி பெறும் கல்வி நிறுவனங்களில் பணத்தை சம்பாதிக்கும் நோக்குடன் ஜாதி ரீதியாக அருந்ததியர்களை மேலும் அடிமட்டத்தில் தாழ்ச்சி அடையச் செய்து எந்தவொரு காலகட்டத்திலும் சூழ்நிலையிலும் முன்னேற்றமடையக் கூடாது என்கிற குறுகிய எண்ணத்துடன் மேற்படி கல்வி நிறுவனங்கள் செய்து வருகின்றன. இதற்கு மாவட்ட கல்வி உயரதிகாரிகள் முழுவதுமாக உடந்தையாக இருந்து செயல்பட்டு வருகின்றனர்.

(PTO)

சாதி ஒழிப்பே

சமூக விடுதலை



# ஆதித்தமிழர் பேரவை

## தேனி மாவட்ட தலைமையகம்

### அல்லிநகரம்.



வீர. பாண்டியன்
மாவட்ட செயலாளர்

தீப்பொறி ராசு
தலைவர்

தேதி : 26/ /2011



இதற்கு உதாரணமாக தேனி அல்லிநகரத்தில் உள்ள முத்தையா நடுநிலைப்பள்ளியில் உள்ள அருந்ததியர் 3% காலியணியிடத்திற்கு நேர்முகத் தேர்வுக்கு சென்ற மாணவி ஆண்டிபட்டி ஒன்றியம் மச்சம்பட்டியைச் சார்ந்த ஜெயசுதா என்பவரிடம் மூன்று மாத காலத்திற்கு பணிநியமனம் செய்து சுழற்சிமுறையில் மேற்பட்ட ஜாதியினரை பணிநியமனம் செய்தபின் மேற்படி ஜெயசுதா அவர்களை பணியை காலிசெய்யும் நோக்குடன் வெற்றுத்தாளில் எந்தவித எழுத்தும் எழுதாமல் கையெழுத்து வாங்கிவைத்துள்ளனர். மேலும் இதே போன்று தேனி சுப்பன் தெருவில் உள்ள மகாராஜா துவக்கப்பள்ளியில் காளிமுத்து மகள் பிரியா என்பவரிடமும் வெற்றுத்தாளில் எந்தவித எழுத்தும் எழுதாமல் கையெழுத்து வாங்கிவைத்துள்ளனர்.

மேலும் மேற்படி கல்விநிறுவனங்கள் போன்று தேனி மாவட்டம் முழுவதிலும் அரசு உதவிபெறும் கல்வி நிறுவனங்கள் மற்றும் தனியார் கல்விநிறுவனங்கள் அனைத்திலும் பணம் சம்பாதிக்கும் நோக்குடன் அருந்ததியர்களுக்கு வழங்கப்பட்ட 3% சதவித உள்இடஒதுக்கீட்டை பெயரளவில் வைத்துக்கொண்டு அருந்ததியர்களை கல்வி, வேலைவாய்ப்பில், ஒடுக்கும் நோக்குடன் செயல்படுவதை தடுத்து, உரிய அதிகாரிகள் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொண்டு, அருந்ததியர்களுக்கு தகுந்த பாதுகாப்பு அளிக்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

ஆண்டிப்பட்டி வட்டம்,
தேனி மாவட்டம்.

பெறுநர்

**உயர்திரு.தலைவர் அவர்கள்,**
ஆதி தமிழர் பேரவை,
தேனி.

ஐயா,

பொருள் : தேனி, மகாராஜா, உதவி பெறும் தொடக்கப்பள்ளியில், காலி இடம், ஏற்பட்ட இடைநிலை ஆசிரியர் (SCA) அருந்ததியினர், பணியிடத்தில் என்னை, 7-12-11 முதல் நியமணம் செய்து பணியாற்ற வைத்து பள்ளி, நிர்வாகம் என்னை கட்டாயப்படுத்தி 23.12.11 முதல் இராஜனாமா கடிதம் எழுதி வாங்கிட என்னை பள்ளிக்கு வராமல் நிறுத்தி விட்டு அப்பணியிடத்தில் சுழல் அடிப்படையில் வேறு இனத்தவரை – நியமிக்க நிர்வாகம் நடவடிக்கை எடுப்பது மேலும் சமூகம் அவர்கள், நடவடிக்கை எடுத்து என்னை, அதே பள்ளியில், தொடர்ந்து பணியாற்ற ஆவண செய்து உத்திரவிட வேண்டுவது சம்மந்தமாக.

*****

நான், தாழ்த்தப்பட்ட அருந்ததியினர், S.C.A வகுப்பைச் சேர்ந்தவள், மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வருகிறேன். இடைநிலை ஆசிரியருக்கான கல்வி தகுதி பெற்றுள்ளேன். மேற்படி மாவட்டம், மேற்படி வட்டம், அலுவலகத்தில் பதிவு செய்ய சென்றேன். அங்கு மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலரை சந்தித்து பதிவு செய்து பின், பின்பு வேலைவாய்ப்பு அலுவலர் பெரியசாமி, அவர்கள் உனக்கு (1) ஒரு மாதத்திற்கான. தனியார் பள்ளியில் பயிற்சி சான்று (Experience) அலுவலகச் சான்று கிடைக்கும்படி செய்கிறேன் என்று சொல்லி தேனி, உதவி பெறும், மகாராஜா தொடக்கப்பள்ளி நிர்வாகியை, தாளாலர் அவர்களை சென்று பார்க்குமாறு அனுப்பினார். நானும், சென்று பார்த்தேன். அசல் எனது கல்விச்சான்றுகள் (ஒரிஜினல்) அனைத்தையும், வாங்கி கொண்டு 7.12.11 முதல் வேலையில் சேர்வதாகவும் அதே நாள், ராஜினாமா கடிதம் எழுதிக்கொடுத்தால் வேலை என்று கூறினார். அதற்கு தேதி குறிப்பிடாமல் ராஜினாமா கடிதம் (2) இரண்டும், எனது கைப்பட எழுதிக் கொடுக்கச் சொன்னார். மேலும் இரண்டு, வெள்ளைத்தாழில் எதுவுமே எழுதாமல், வெறும் கையெழுத்து மட்டும் காலி பக்கத்தில் கீழே, கையெழுத்து இரண்டு பேப்பரில் வாங்கி கொண்டு இதை யாரிடம் சொல்லக்கூடாது என்று கூறினார். நாளை முதல் தினமும் பள்ளிக்கு வரலாம் என்று கூறினார். எனது தகப்பனார், மேற்படி கல்வி இலாக்கா அலுவலர் விசாரித்ததில் திடீர் தகவல் எனக்கு கிடைத்தது என்ன செய்வது இதுவரையிலும், இந்த பணியிடம் நிரந்தர பணியிடம், இதற்க்கு அரசு ஊதியம் வழங்கப்படும், என்ற விபரமும் எனக்கு தெரியாது மேலும் இது விபரமாக பள்ளி, நிர்வாகியோ, மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலரோ, (பெரியசாமி அவர்களோ) எண்ணிடம் கூறவில்லை.

கடந்த 23.12.11-அன்று இனிமேல் பள்ளிக்கு வரவேண்டாம், இதுவரை வேலை பார்த்ததிற்கு ரூபாய் 5000/- சம்பளம், மேற்கொண்டு, இருபது ஆயிரம் (20,000) தருகிறேன், பெற்றுக் கொண்டு உனது அசல் சான்றிதழ்களை பெற்றுக்கொள், என கூறி, என்னையும் எனது தந்தையும், அண்ணனையும், (K.பிரகாஷ்) பள்ளியிலிருந்து வெளியேற்றி விட்டார்கள், இந்த விபரத்தை தேனியிலுள்ள கல்வி அலுவலர் இடம் விசாரித்ததில் இப்பணியிடம் நியமன சுழற்ச்சியில் தாழ்த்தப்பட்ட (அருந்ததியினர்) வகுப்பைச் சார்ந்தவர்களுக்கான இட ஒதுக்கீடு எனவும் இப்பணி இடத்தை S.C.A அருந்ததியர் இனத்தவரைக் கொண்டு நிரப்பி, பின்பு இராஜினாமா செய்து விட்டு, அதற்கான ஒப்புதலை தேனி மாவட்ட தொடக்க கல்வி அலுவலரிடம், பெற்று அதே பணியிடத்தில், வேறு இனத்தவரை அதாவது இனச் சுழற்ச்சி முறைப்படி, நியமனம் செய்து அதிகபணம், ரூபாய் 15,00,000/- லட்சம் வரை பெற வேண்டுமென்ற நோக்கத்துடன், செய்வதாகவும், இதற்க்கு தேனி உதவி தொடக்க கல்வி அலுவலகமும் தேனி மாவட்ட தொடக்கக்கல்வி அலுவலகமும், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் பெரியசாமி அவர்களும் உடந்தையாக இருப்பதாகவும், தெரிய வந்தது.

மேற்படி, நான், தாழ்த்தப்பட்ட அருந்ததியர் (S.C.A) இனத்தைச் சேர்ந்த ஏழ்மைக் குடும்பத்தில் பிறந்தவள் என்னை எனது தந்தை கூலி வேலை செய்து மிக, மிக கஷ்டப்பட்டு படிக்க வைத்துள்ளார். எனது சூழ்நிலையை கருதி என் மீது கருணை கூர்ந்து தொடர்ந்து அதே பள்ளியில் பணியாற்ற நடவடிக்கை எடுத்து ஆணை வழங்கும்படி செய்திட மிகத்தாழ்மையுடன் வேண்டுகிறேன்.

தற்போதைய முகவரி,
நா. பிரியா, D.T.Ed.
த/பெ. நா. நாகேந்திரன்
வடக்குத் தெரு, வயல்பட்டி, வீரபாண்டி, தேனி.

தாங்கள் உண்மையுள்ள,

K. Priya

(P.T.O)